முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | OS | 203 | of | 2018 |

2024-ம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாளான இன்று

வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேணுகோபால் | தந்தை பெயர் | |
| கிராமம் | | கணவர் பெயர் | |
| ஜாதி | | தாலுக்கா | |
| | | சமயம் | |
| தொழில் | | வயது | |

நாள்-01.07.2026

வா.சா.-1

குறுக்கு விசாரணை-

எனக்கு எழுத படிக்க அவ்வளவாக தெரியாது. ஆனால் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். சொத்து என்னுடையது என்று சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். என் தகப்பனார் பெயர் ராதா கிருஷ்ணன். என் தாத்தா பெயர் சுந்தர்ராஜன் ரெட்டியார். சொத்தின் சர்வே எண் 14/6 பி ஆகும். சொத்து எனது பெயரில் உள்ளது என்பதை காட்ட பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சுவாதீனத்தை காட்ட கூடிய ஆவணங்களை மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே விளம்புகை பரிகாரம்

கோரமுடியாது என்றால் சரியல்ல. 23.02.2018 ல் ராதாகிருஷ்ணன் மனைவி பக்தவட்சலா அவரது மகள்கள் பட்டா மாற்றம் கோரி மனு கொடுத்து அந்த விவரம் தெரிய வந்ததும் நான் ஆட்சேபித்தேன். அந்த ஆவணம் வாசா-ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆட்சேபனை மனு மீது வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் உத்தரவு போடாததால்தான் நீதிமன்றத்தை அனுகி இந்த வழக்கை தாக்கல் செய்தேன். வில்லங்க சான்றிதழ் 1987 லிருந்து 2012 வரை தாக்கல் செய்திருக்கிறேன். ஆனால் 2012 முதல் தாவா தாக்கல் செய்த 2018 வரை வில்லங்க சான்றிதழ் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்ய முடியும். வழக்கில் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளது போதுமானது இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கிற்கு அவசியம் இல்லாத தரப்பினர் என்றால் சரியல்ல. வழக்கில் முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை- வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

T
CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu